1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

முதலமைச்சர் அவைக்கு வராமை குறித்து.

(பிற்பகல் 11-10)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை நடைபெறுகின்ற நேரங்களில் பெரும்பாலும் முதலமைச்சர் அவர்கள் வருவதில்லை. அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளில் விளக்கங்களை உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்றாலுங்கூட, அவரிடம் உள்ள ஒரு இலாகா கேள்விகள் கூட எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. பொதுத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, அறநிலையத் துறை பற்றிய கேள்விகள் கேட்க முடியவில்லை. ஆகையால் முதலமைச்சர் அவர்கள் இங்கே வருவதற்கு அவைத் தலைவராகிற தாங்கள் ஏற்பாடு செய்து அவருக்கான கேள்விகள் இந்த அவையில் வருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் வரவில்லையென்றால், அவருக்காகப் பதில் சொல்லக் கூடிய பொறுப்பு அவை முன்னவருக்கு உண்டு. கேள்விகளைத் தள்ளிப்போடுவது நோக்கமாக இருந்தால், தலைவர் தலையிட்டுத் தவிர்க்க முடியும். கேள்வி தவிர்க்கும் முயற்சி வரவில்லை. விளக்கம் பெறவேண்டுமென்றால், முன்னவரிடம் பெற முடியும். அதற்கு எவ்விதத் தடையும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நேரங்களில் சட்டப் பேரவையில் இருக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அதனால்தான் இரண்டு அவையிலும் ஏக காலத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. மேலும் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசியதற்குப் பிறகு, அவர்களுக்கு வந்துள்ள கேள்விகளை இப்போதுதான் வாங்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தொடர்ந்து அடுத்த கூட்டங்களில் கேள்விகளை எடுத்துக்கொள்வார்கள். முக்கியமான கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்களே இங்கு வந்து விடையளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலமைச்சரை அவர் அடிக்கடி பார்க்க விரும்புகிறார்.

திரு. கோ. சி. மணி: மேலவை நேரத்தை மாலையிலிருந்து காலைக்கு மாற்றியதால் முதலமைச்சர் அவர்களுக்கு இங்கே வருவதற்கு சந்தர்ப்பம் இல்லாததுபோலத் தெரிகிறது. அப்படியென்றால் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அப்படிப்பட்ட புகார் எதுவும் என்னிடம் வரவில்லை.

திரு. கோ. சி. மணி: இரண்டு அவைகளும் ஒரே சமயத்தில் நடைபெறுவதால், இங்கே முதலமைச்சர் அவர்கள் வர முடியவில்லை என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் வருவதாக இருந்தால், அவை நேரத்தை மாலைக்கேகூட மாற்றிக்கொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அலுவல் ஆய்வுக் குழுவிலே அவை நேரத்தை காலையில் வைக்க வேண்டுமென்ற குறிப்பைக் கொடுத்தவர்களில் நானும் ஒருவன். காலையில் கூடுவதால் உறுப்பினர்களுக்குப் பல பலன்கள் இருக்கின்றன. மாலை நேரம் என்றால், தலைவர் அவர்களுக்குக் கூட பொதுக் கூட்டங்களுக்குப் போவதற்கு இடையூறாக இருக்கிறது. எங்களுக்கும் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதைச் சொல்லுங்கள். வீணாக தலைவரின் மேல் ஏன் சுமத்துகிறீர்கள்? (சிரிப்பு).

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, தங்களை மட்டும் குறிக்கவில்லை. மற்ற தலைவர்களுக்கும் அந்தக் கவலை இருக்கிறது என்பதைத் தான் சொன்னேன். எங்களுக்கு மாலையில் வேறு வேலைகளைக் கவனிக்க வழி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு அவைகளுக்கும் வருவதற்குச் சிரமமாக இருக்குமென்று சொன்னார்கள். கூடுமான வரையில் வாருங்கள் என்று சொல்கிறோம். அதற்காக நேரத்தை மாற்றுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: காலையில் வைப்பதால் பல சௌகரியங்களும், சங்கடங்களும் இருக்கின்றன. மாலையில் வைத்தாலும் அப்படித்தான். ஆராய்ந்து பார்த்ததில் காலையில் வைப்பதுதான் பெரும்பாலும் நல்லது என்று முடிவு செய்தோம். அவசியமிருக்குமானால், நேரத்தை மாற்றுவதற்குத் தடை கிடையாது. குறிப்பிட்ட சில நாட்களில் மாலையில் வைத்துக்கொள்வதில்கூட சிரமம் இல்லை.

1978 பிப்ரவரி 27]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்க வேண்டுமென்பது என்னுடைய அவா. கூடுமான வரையில் அதிக நேரம் இந்த சபைக்கு அவர் வர வேண்டுமென்பது என்னுடைய ஆசை. சட்டப் பிரச்சினையைப் பார்க்கும்போது, நான் சில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திரு. காமராஜ் அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். நான் இங்கே எம்.எல்.சி.யாக 1962-ல் வந்தேன். பதவிப் பிரமாணம் அன்றைக்கு இந்தச் சபைக்கு வந்தார். அவர் இருந்த போது, பத்து மாதம் நான் இங்கே இருந்திருக்கிறேன். ஒருநாள் கூட இந்த சபைக்கு அவர் வந்ததில்லை. அப்போது திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் சபை முன்னவராக இருந்தார்கள். அவர்தான் பதில் சொல்வார். ஆகையால் முதலமைச்சர் வரவில்லை என்று குற்றம் சாட்ட முடியாது. வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். நானும் அவர் அடிக்கடி வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதை அதற்கான விவாத நேரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவை முன்னவர் தந்த விளக்கத்தோடு விட்டு விடுகிறேன்.

3. 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்றும் முக்கியமாக மத்திய மாநில நிதி உறவுகளைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் அதற்கு முன்னதாக இன்றையதினம் அவை நடந்துகொண்டிருந்தபோது, உயர் செகண்டரி கல்வியைப் பொறுத்தவரையில், எவ்வளவு கேள்விகளுக்குக் கல்வி அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு உட்கார்ந்து எழுந்து சிரமப்பட்டார்கள் என்பதையும், சில சமயம் நாங்கள் கேட்டது என்ன என்று புரியாமல் எவ்வளவு சுருக்கமாக பதில் சொன்னார்கள் என்பதையும் நான் கவனித்துக் கொண்டிருந்தேன். கல்வியைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் அவையின் பாதி நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று மற்ற உறுப்பினர்கள் குறை சொல்வது வழக்கம். இந்த அவையிலுள்ள ஆசிரியர் பிரதிநிதிகள், பட்டதாரிகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறோம். அதன் அடிப்படையில் கேட்க வேண்டியிருக்கிறது. உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் சொல்லியதைப் போல, 1967 முதல் 1978 வரையில் நீண்ட நாட்களாக இந்த அவையில்